தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>தமிழகம், புதுச்சேரியில் நாளை மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு</u>

e 


தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ புதன்கிழமை(செப்.10) பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னையைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டமாக இருக்கும். நகரின் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். செவ்வாய்க்கிழமை காலை வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் நீலகிரி மாவட்டம் தேவலாவில் 80 மி.மீ, ஜி.பஜாரில் 50 மி.மீ, நடுவட்டத்தில் 30 மி.மீ, கோவை மாவட்டம் சின்னக் கல்லாரில் 30 மி.மீ, வால்பாறை தாலுகா அலுவலகத்தில் 20 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை அதிகபட்சமாக மதுரையில் 101 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவாகியது. அதே போல் திருச்சி, நாகை, தூத்துக்குடியில் தலா 100 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் நிலவியது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்த விவகாரம்: ஏழைகள், விவசாயிகள் நலன்களைப் புறக்கணிக்க முடியாது: மோடி**



தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசுகிறார், உணவு- விவசாய அமைப்பின் (எஃப்.டி.ஓ.) தலைமை இயக்குநர் ஜோஸ் கிரேஜியானோ டா சில்வா.

"உணவு மானியம் தொடர்பான விவகாரத்தில் உலக வர்த்தக அமைப்பின் பேச்சுவார்த்தைக்கு இந்தியா முட்டுக்கட்டை போடவில்லை. ஆனால், அதற்காக ஏழைகள், விவசாயிகள் நலன்களைப் புறக்கணிக்க முடியாது" என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார். உலக வர்த்தக விதிகளை முடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக இந்தியா மீது குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு கூறினார். இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
உணவு மற்றும் விவசாய அமைப்பின் (எஃப்.டி.ஓ.) தலைமை இயக்குநர் ஜோஸ் கிரேஜியானோ டா சில்வா, தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார். அப்போது அவரிடம், உலக வர்த்தக அமைப்பில் (டபிள்யூ.டி.ஓ.) ஏழைகள், விவசாயிகளின் நலன்களை பாதுகாப்பதற்கான போராட்டத்துக்கு எஃப்.டி.ஓ. தலைமை தாங்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

மேலும் சில்வாவிடம், இந்திய விவசாயத்துறைக்கு ஏற்பட்டுள்ள சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் துடிப்பான பங்களிப்பை எஃப்.டி.ஓ. அமைப்பு அளிக்க வேண்டும் என்று இந்தியா விரும்புவதாகவும் மோடி கூறினார். உலக வர்த்தகம் தொடர்பான ஒப்பந்த விதிகளின் குறுக்கே இந்தியா நிற்காது. ஆனால், உணவு பாதுகாப்பு விவகாரத்தில் ஏழைகள், விவசாயிகளின் நலன்களை இந்தியா

ஒருபோதும் விட்டுக் கொடுக்காது என்றும் அவரிடம் பிரதமர் கூறினார். அத்துடன் இந்தியாவில் பெண்களை முன்வைத்து மேற்கொள்ளப்படும் பிரசாரத்துக்கு எஃப்.டி.ஓ. அமைப்பு தனது ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என்றும் சில்வாவிடம் பிரதமர் கேட்டுக் கொண்டார். இந்த சந்திப்பின்போது பிரேசிலில் செயல்படுத்தப்பட்டு வரும் "பட்டினி ஒழிப்பு' திட்டத்தின் முன்னோடி என்று சில்வாவை நரேந்திர மோடி புகழ்ந்தார் என்று பிரதமர் அலுவலகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் கடந்த ஜூலை மாதம், உணவு பாதுகாப்பு தொடர்பாக முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக, உலக வர்த்தக அமைப்பின் மாநாடு நடைபெற்றது. இதில் உலக வர்த்தக அமைப்பில் உள்ள 160 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில், உணவு தானிய இருப்பு, உணவு மானியம் ஆகிய விவகாரங் களில் முன்வைக்கப்பட்ட சரத்துகளை அப்படியே ஏற்க முடியாது என இந்தியா அறிவித்தது. இதனையடுத்து மாநாட்டில் எந்த முடிவும் எடுக்கப்படாமல் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதற்கு இந்தியாவே காரணம் என்று அமெரிக்கா குற்றம் சாட்டியது.

## "பருத்தி ஏற்றுமதி 35% சரிவடைய வாய்ப்பு'



இந்த ஆண்டு இந்திய பருத்தி ஏற்றுமதி அளவு 35 சதவீதம் சரிவு அடைய வாய்ப்புள்ளது என்று அமெரிக்க வேளாண் துறை அமைச்சகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2014-2015 நிதி ஆண்டில், ஆகஸ்ட் முதல் ஜூலை வரையிலான விற்பனையாண்டு கால அளவில், இந்தியாவின் மொத்த

பருத்தி ஏற்றுமதி 76.9 லட்சம் "பேல்களாக' இருக்கும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு "பேல்' என்பது 170 கிலோ எடை அளவாகும். சென்ற விற்பனையாண்டில், பருத்தி ஏற்றுமதி அளவு 1.17 கோடியாக இருந்தது. மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விவரம்:

கடந்த ஜூன் மாதம் முதலே பருத்தி ஏற்றுமதி குறைந்து வருகிறது. ஜூன்-ஜூலை மாதங்களில் மொத்தமாக 4.85 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதியானது. ஆகஸ்டில், 68,000 பேல்கள் ஏற்றுமதி ஆகின. கடந்த ஆண்டு ஆகஸ்டில் 2.6 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதியானது குறிப்பிடத்தக்கது. சீனாவில் பருத்தி இறக்குமதி மந்த கதியிலாகிவிட்டது. ஆயினும், பாகிஸ்தான், வங்க தேசம் மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு பருத்தி ஏற்றுமதியாவதில் எந்த தொய்வும் இருக்காது எனத் தெரிகிறது. பொதுவாகவே, சர்வதேச சந்தையில் பருத்திக்கான தேவை சற்றுக் குறைந்துள்ளது. பருத்தி வர்த்தகத்தின் பட்டியலில் குறிப்பிட்டுள்ள விலையைக் காட்டிலும் தற்போது இந்திய பருத்தி விலை சற்றுக் கூடுதலாக உள்ளது. இதன் காரணமாக, ஆண்டு விகிதத்தில் ஏற்றுமதி அளவு சரிய வாய்ப்புள்ளது. நடப்பு ஆண்டில், இந்திய பருத்தி உற்பத்தி அளவு 3.78 கோடி பேல்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2013-2014 ஆண்டில் உற்பத்தி அளவு 3.91 கோடி பேல்களாக இருந்தது. இவ்வாண்டு உள்நாட்டில் பருத்திப் பயன்பாடு 3 கோடி பேல்களாக இருக்கும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் பருத்தி உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடத்தை வகிக்கிறது. அதிகபட்சமாக நம் நாட்டுப் பருத்தியை வாங்கும் நாடு சீனாவாகும். இரண்டாம் இடத்தில் வங்க தேசமும் மூன்றாமிடத்தில் பாகிஸ்தானும் உள்ளன.

## <u>கீழ்பவானி பாசனப் பகுதியில் நெல் நடவுப் பணி தீவிரம்</u>

சத்தியமங்கலம், கீழ்பவானி பாசனப் பகுதியில் நெல் நடவுப் பணி துவங்கியது.

பவானிசாகர் அணையிலிருந்து ஆகஸ்ட் 15-ஆம் தேதி முதல் கீழ்பவானி வாய்க்கால் ஒற்றைப்படை மதகுகளுக்கு நன்செய் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதன் மூலமாக ஈரோடு, திருப்பூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 1 லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. தண்ணீர் திறக்கப்பட்டு 25 நாள்கள் ஆனதால் பவானிசாகர், தொட்டம்பாளையம், எரங்காட்டுர், அய்யன்சாலை, மாரனூர், செண்பகபுதூர், பெரியூர், உக்கரம், சத்தியமங்கலம் சுற்று வட்டாரப் பகுதிகளில் உழவு, நடவுப்

பணிகளை விவசாயிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். கிளை வாய்க்கால்களில் திறந்துவிடப்படும் நீரின் மூலமாக நாற்றங்கால் தயார் செய்து விதை நெல் தூவி தற்போது நாற்றுகள் நன்கு செழித்து வளர்ந்துள்ளன. வயல் வரப்புக்கள் வெட்டி சீராக்கப்பட்டு பவர் டிரில்லரை பயன்படுத்தி உழவுப் பணி நடைபெறுகிறது.

வயலில் நீர் ஒரே அளவில் சீராக நிற்கும் வகையில் பலகையால் சமன்படுத்தப் படுகிறது. அடியுரம் இடப்பட்டு நாற்றங்காலிலிருந்து நாற்றுக்கள் பறிக்கப்பட்டு நடவுப் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. நடவுப்பணி துவங்கியதால் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் தேவை அதிகரித்துள்ளது.

**<u>தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாநில மாநாடு ஈரோட்டில் செப்.17-ல் துவக்கம்</u>**

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாநில மாநாடு ஈரோட்டில் செப்.17-ம் தேதி துவங்குகிறது. இது குறித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு மாவட்ட அலுவலகத்தில் இச்சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலர் இரா.முத்தரசன் செய்தியாளர்களுக்கு செவ்வாய்க்கிழமை அளித்த பேட்டி:

தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 11-வது மாநில மாநாடு ஈரோடு பழையபாளையத்தில் உள்ள குருசாமி கவுண்டர் திருமண மண்டபத்தில் செப்.17 முதல் 19-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. மாநாட்டு கொடியை மூத்த உறுப்பினர் கே.எஸ்.நாச்சிமுத்து ஏற்றி வைக்கிறார். தியாகிகள் நினைவு மேடையை சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் டி.கே.நல்லப்பன் திறந்து வைக்கிறார். நாட்டின் விடுதலைக்கு பாடுபட்ட தியாகிகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. புத்தகக் காட்சி திறப்பு விழா, நூல் வெளியீட்டு விழா ஆகியன நடைபெறும். மாநாட்டை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு துவக்கிவைத்து பேசுகிறார். அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கப் பொதுச்செயலர் நாகேந்திரநாத் ஓசா, "இந்திய அரசின் விவசாயக் கொள்கையும், விவசாயத் தொழிலாளர் கடமையும்' என்னும் தலைப்பில் பேசுகிறார். தமிழ் மாநிலப் பொதுச்செயலர் ஜி.மணி உள்பட பல்வேறு அமைப்பு நிர்வாகிகள் பேசுகின்றனர். துவக்க விழா அன்று மாலை 5 மணி அளவில் சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் கோ.பழனிசாமி தலைமையில் சிந்தனை அரங்கம் நடைபெறுகிறது. தாமரை இதழின் ஆசிரியர் சி.மகேந்திரன், தமிழ்நாடு ஏஐடியுசி மாநிலத் தலைவர் கே.சுப்பராயன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் த.ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் கருத்துரை

ஆற்றுகின்றனர். 2-ம் நாள் அமர்வில் கல்வியாளரும், முன்னாள் துணைவேந்தருமான வே.வசந்திதேவி, உழைக்கும் பெண்கள் அமைப்பின் செயலர் வகிதா நிஜாம் ஆகியோர் பெண் தொழிலாளர் பிரச்னைகள் பற்றி பேசுகின்றனர். பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் இரா.இராசுவின் "இயக்கும் பெத்தவன்' என்னும் சமூகவியல் நாடகம் நடைபெறுகிறது. 3-வது நாளில் விவசாயத் தொழிலாளரின் பிரச்னைகள் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். நிறைவு விழாவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் சிறப்புரையாற்றுகிறார் என தெரிவித்துள்ளார்.

**<u>நாகை மாவட்டத்தில் நாளை கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெறும் இடங்கள்</u>**

நாகை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், நாகை மற்றும் மயிலாடுதுறை கோட்டப் பகுதிகளில் செப். 11-ம் தேதி கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெறும் இடங்களை மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி வெளியிட்டுள்ளார். இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், நாகை மாவட்டத்தில் கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தும் பணியின் 7-ம் சுற்று கடந்த 1-ம் தேதி தொடங்கி, செப். 21-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில், 2-ம் கட்ட முகாம் பணிகள் செப். 8-ம் தேதி தொடங்கி, செப். 14-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதன்படி, நாகை மற்றும் மயிலாடுதுறை வருவாய்க் கோட்டங்களில் செப். 11-ம் தேதி கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெறுமிடங்களின் விவரம் (ஊராட்சி ஒன்றியம்- முகாம் நடைபெறும் கிராமங்கள்): நாகை- தேமங்கலம், ஐவநல்லூர் மற்றும் நாகை நகராட்சிப் பகுதிகள். திருமருகல்- துண்டாம்பாலையூர், வாகைமங்கலம், கோட்டூர், கொங்கராயநல்லூர், கீழபூதனூர், குருவாடி. கீழ்வேளூர்- கோவில் கண்ணாப்பூர், சாட்டியக்குடி, சிகார், இலுப்பூர். கீழையூர்- இறையான்குடி, கீழையூர், விழுந்தமாவடி. தலைஞாயிறு - மழைமாரியம்மன் கோவில் தெரு, அவுரிக்காடு, உம்பளச்சேரி (மேற்கு). வேதாரண்யம்- கொள்ளித்தீவு, வாய்மேடு, ஆயக்காரன்புலம்-2, ஆயக்காரன்புலம்- 1. மயிலாடுதுறை- திருச்சிற்றம்பலம், கோடங்குடி. குத்தாலம்- கங்காதரபுரம், கழனிவாசல், பண்டாரவாடை. செம்பனார்கோவில்- ஆக்கூர், திருவிடைக்கழி. சீர்காழி- செம்பதனிருப்பு, பெருமங்கலம். கொள்ளிடம்- அகர வட்டாரம், எடமணல், கடவாசல்.

பின் சம்பா தாளடி பட்டத்திற்கு ஏற்ற புதிய நெல் ரகம் கோ-50 நீடா மங்கலம், செப். 9: பின் சம்பா மற்றும் தாளடி பட்டத்திற்கு ஏற்ற புதிய நெல் ரகம் கோ-50 விதையை பெற்று பயனடைய விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அழைப்பு விடுத்துள்ளார். இதுதொடர்பாக நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குநர் ந. இளஞ்செழியன் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நெல் துறையிலிருந்து பின் சம்பா மற்றும் தாளடி பட்டத்திற்கு வெளியிடப்பட்டுள்ள புதிய நெல் ரகம் கோ(ஆர்)50 நெல் விதைகள் நீடாமங்கலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவையான விவசாயிகள் விதைகளை வாங்கிப் பயனடையலாம். கோ 50 நெல் ரகம் பின் சம்பா மற்றும் தாளடிக்கு ஏற்றது. 135 நாட்கள் வயதுடைய இந்த ரகம், ஆடுதுறை 38 மற்றும் கோ-43 ரகத்தை ஒட்டுசேர்த்து உருவாக்கப்பட்டது. சாயாத தன்மை, நடுத்தர உயரம், 10 முதல் 15 கதிருள்ள தூர்கள் கொண்டது. இந்த ரகம் பூச்சி மற்றும் நோய்க்கு எதிர்ப்பு தன்மை உடையது. குறிப்பாக, தண்டு துளைப்பான், இலைசுருட்டுப்புழு ஆகிய பூச்சிகளும், குலைநோய், இலையுறைஅழுகல், பாக்டீரியா இலைகருகல், துங்ரோ ஆகிய நோய்களுக்கு மிதமான எதிர்ப்பு திறன் உடையது. மத்திய சன்ன அரிசியை உடைய இந்த ரகம் நல்ல அரவைத் திறனும் உடையது. ஒட்டாத சாததன்மையும், இட்லி தயாரிப்பதற்கும் உகந்தது. இது சராசரியாக ஹெக்டேருக்கு 6,476 கிலோ மகசூல் கொடுக்கக்கூடியது. எனவே, விதை தேவைப்படும் விவசாயிகள் நீடாமங்கலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வாங்கிப் பயனடையலாம்.

## <u>வாலாஜா ஏரியில் இருந்து சம்பா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு</u>

வாலாஜா ஏரியில் இருந்து சம்பா பாசனத்துக்கு திங்கள்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. கடலூர் மாவட்டம், வடலூருக்கு தெற்குப் பகுதியில் 1,664 ஏக்கர் பரப்பளவில் வாலாஜா ஏரி உள்ளது. என்எல்சி சுரங்கத்திலிருந்து தினமும் வெளியேற்றப்படும் 20 ஆயிரம் கேலன் தண்ணீர், பரவனாறு வழியாக வாலாஜா ஏரிக்கு வருகிறது. அங்கிருந்து மீண்டும் பரவனாறு வழியாக பெருமாள் ஏரியைச் சென்றடைகிறது. வாலாஜா ஏரியின் 12 பாசன மதகுகள் மூலம் குறிஞ்சிப்பாடி மற்றும் புவனகிரி ஒன்றியங்களில் உள்ள 11 ஆயிரத்து 392 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற்று, முப்போகம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பொதுப்பணித் துறை பராமரிப்பில் உள்ள இந்த ஏரி, உரிய பராமரிப்பு இல்லாததால் பெரும் பகுதி தூர்ந்ததோடு, கரைகளும் பலவீனமடைந்தன. இதனால், ஏரியை தூர்வாரி

ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதனை ஏற்று ஏரியை தூர்வார என்எல்சி நிர்வாகம் தனது சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் ரூ.13.72 கோடி நிதியை ஒதுக்கீடு செய்தது. அந்நிறுவன மேற்பார்வையில் சுமார் 60 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. கடந்த மார்ச் மாதம் 3ஆம் தேதி தொடங்கப்பட்ட இப்பணிகள் 18 மாதங்களில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், என்எல்சி சுரங்கம் 2-ல் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீர், தூர்வாரிய பகுதிகளில் தேக்கப்பட்டு வருகிறது. இந்த நீரை கொண்டு வாலாஜா ஏரிப் பாசனத்து 12 மதகுகளிலும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வாலாஜா ஏரிப் பாசன சங்கத் தலைவர் ராமானுஜம், செயலர் தவமணி, என்எல்சி செயற்பொறியாளர் ராமமூர்த்தி, முதன்மை மேலாளர் குமார் உள்ளிட்டோர் தண்ணீர் திறப்பில் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பெரியாறு பாசன பகுதிகளில் விவசாய பணிகள் தீவிரம்**

மதுரை : வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில், பெரியாறு பாசனக் கால்வாய் பகுதிகளில் விவசாயப் பணிகள் தீவிரமாக நடக்கிறது. பருவமழை பொய்த்ததால் சில ஆண்டுகளாக விவசாய பணிகள் இப்பகுதியில் நடக்கவில்லை. இந்தாண்டு முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை உயர்த்த உத்தரவிட்டதும், எதிர்பார்த்த மழை இல்லாத போதும் போதியளவு தண்ணீர் அணைகளில் உள்ளதால், விவசாயிகள் ஆறுதலடைந்து உள்ளனர்.தற்போது வைகை அணையில் திறந்து விடப்பட்ட தண்ணீர் இப்பகுதிக்கு வந்து சேர்ந்தது. இதனால் மதுரை மாவட்டம் மேலூர், அழகர்கோவில் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் விவசாய பணிகள் துவங்கி தீவிரமாக நடக்கின்றன. கள்ளந்திரி 9 வது கால்வாய் மூலம் பாசனம் பெறும்

கருப்பாயூரணி, ஆண்டாள் கொட்டாரத்தில் நாற்று நடவுக்காக வயல்களை உழும் பணி நடக்கிறது. விவசாயி கருத்தான்: மூன்று நாட்களாக கருப்பாயூரணி பாசனத்திற்கு தண்ணீர் வருகிறது. வயல்களில் நெல் விதை விதைக்கப்பட்டுள்ளது. பத்து நாட்களில் நடவு பணிகள் துவங்கும். மழை பெய்யும் நம்பிக்கை உள்ளது. இரு போகம் நடந்த இப்பகுதிகளில் சில ஆண்டுகளாக ஒரு போகம் விவசாயம் மட்டும் நடக்கிறது.விவசாயிகள் கருப்பு, சமையன்: சோனா, ஜே.சி.எல்., நாற்றுகள் நடவு செய்ய உள்ளோம். 90 முதல் 110 நாட்களுக்குள் அறுவடைக்கு வரும். தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில் மழையும் பெய்தால், தொடர்ந்து தண்ணீர் 3 மாதங்களுக்கு கிடைக்கும்.

## 2016ல் பனாமா கால்வாய் திறப்பு

மட்ரிட் : பனாமா கால்வாயின் விரிவாக்கப் பணிகள் நிறைவடையும் கட்டத்தில் உள்ளதால், 2016ம் ஆண்டில் பனாமா கால்வாய் வர்த்தக பயன்பாட்டிற்காக திறக்கப்படும் என பனாமா அதிபர் தெரிவித்துள்ளார். கால்வாய் விரிவாக்கப் பணிகள் 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் முழுவதுமாக நிறைவடையும் எனவும் பனாமா அதிபர் ஜுவான் கார்லஸ் வரிலா தெரிவித்துள்ளார்.

## நாடு முழுக்க ஆன் – லைன் தேயிலை ஏலம் ‘ஒரே நாளில் இந்தியா திட்டம் விரைவில் அமல்

குன்னூர் :சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காக, மத்திய அரசு ஒதுக்கியுள்ள, 20 ஆயிரம் கோடி ரூபாய், மாநில அரசுகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள தென்னிந்திய தேயிலை தோட்ட அதிபர்கள் சங்கத்தின் (உபாசி) 121வது ஆண்டு கருத்தரங்கின் நிறைவு நாளில் மத்திய தொழில் வணிக துறை கூடுதல் செயலர் ரஜனி ரஞ்சன் ராஷ்மி நிருபர்களுக்கு அளித்த பேட்டி: அகில இந்திய அளவில் ஆன்–லைனில் தேயிலை ஏலத்தை நடத்தும், ‘ஒரே நாளில் இந்தியா’ என்ற திட்டம் பரிசீலனையில் உள்ளது. விரைவில் இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.12வது ஐந்தாண்டு திட்டம் கிடப்பில் உள்ளதால், மானியங்கள் தொழிற்சாலைகளுக்கு கிடைக்காமல் உள்ளது.இதனால், 11வது ஐந்தாண்டு திட்டத்தில் உள்ள மானியங்களை

தொடர்ந்து செயல்படுத்தி வருகிறோம்.12வது திட்டம் எப்போது நடைமுறைக்கு வருகிறதோ அப்போது, புதிய திட்டங்கள் செயல் படுத்தி, மானியம் வழங்கப்படும்.சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காக, 20 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் மாநில அரசுகள் மூலமாக நடைமுறைப் படுத்தப்படும்.இவ்வாறு, ராஷ்மி பேசினார்.

**<u>பணம் தரும் பேரீச்சை வளர்ப்பு</u>**



தற்போதைய வறட்சியில், தென்னை மட்டுமல்ல, பல இடங்களில் பனை மரமும் காய்ந்துள்ளது. இருப்பினும், பனை மர வகையைச்சேர்ந்த பேரீட்சையை சாகுபடி செய்து, பாலைவன மரத்தை பணம் வரும் மரமாக மாற்றி சாதனை படைத்துள்ளார் 65 வயது விவசாயி எஸ்.டி.எம். முருகேசன். திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் அருகே போழியம்மனூரைச்சேர்ந்த இவர், மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் உள்ள 3 ஏக்கர் நிலத்தில் 400 க்கும் மேற்பட்ட பேரீச்சை மரங்களை பராமரித்து வருகிறார். சாதனை ரகசியம் குறித்து முருகேசன் கூறியதாவது: ஒரு பேரீட்சை மரம் பழங்களை கொடுக்க, குறைந்தது மூன்றாண்டுகள் ஆகும். பர்ரி ரகம் மட்டுமே, முதல் முறையில் 27 மாதங்களில் பலன்தரும். அடுத்தடுத்து, ஆண்டுதோறும் பிப்ரவரியில் பூ மலர்ந்து, ஜூலையில் பலனளிக்க தயாராகிவிடும். ஒரு கன்றின் விலை 3 ஆயிரத்து 500 ரூபாய். சவுதியில் உள்ள உறவினர் மூலம் வாங்கி வந்து வளர்க்கத் துவங்கினோம். ஆண், பெண் மரங்கள் தனித்தனியே வளரும். பிப்ரவரியில் பூ மலரும்போது, ஆண் மரத்தின் மகரந்தங்களை சேகரித்து, பெண் மர பூக்களில் சேர்க்கும் பணியை, நாம்தான்

மேற்கொள்ள வேண்டும். 20 முதல் 25 அடி இடைவெளியில் கன்றுகளை நட்டு, அதிக தண்ணீர் கொடுத்தோம். ஐந்து தென்னை மரங்களுக்குரிய தண்ணீரை, ஒரு மரத்திற்கு கொடுக்க வேண்டும். அடியுரம், குலை தள்ளிய 15 வது நாளில் குச்சி கட்டுதல் என, பராமரிப்பிற்காக தலா ஒரு மரத்திற்கு 4 ஆயிரம் ரூபாய் செலவானது. பழுத்தபின், காய்கள் மஞ்சள் நிறமாகும். குலையின் ஒவ்வொரு குச்சியிலும் 20 க்கும் மேற்பட்ட காய்கள் இருந்தாலும், அடுத்தடுத்து பெருமளவு உதிரும். இருப்பினும், எஞ்சியவை பருத்து சதைப்பிடிப்பு அதிகரிக்கும். ஒரு குச்சிக்கு ஏழு கிலோ வரை, பேரீட்சை பழம் கிடைக்கும். மார்க்கெட்டிங் செய்வதிலும் பிரச்னை இல்லை. தகவலறிந்த பலர், நேரடியாக வந்து வாங்கிச்செல்கின்றனர். தற்போது, கிலோ 250 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பிற ரகத்தை சேர்ந்த பேரீட்சைகள், பதப்படுத்தி, இனிப்புச்சுவை ஏற்றப்பட்டு, விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. பர்ரி ரகத்தை, நேரடியாகச்சாப்பிடலாம். வைட்டமின்கள், தாதுக்கள், சத்துப்பொருட்கள் நிறைந்து, சீரான உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. எளிதில் ஜீரணமாகும் நார்ச்சத்து, கெட்ட கொழுப்புகளை உறிஞ்சி அகற்றும் ஆற்றல் , பெருங்குடல் பகுதியில் புற்றுநோய் உருவாக்கும் ரசாயனங்களை நீக்குவதில் முக்கிய பங்கு போன்றவை சிறப்பு அம்சங்கள். தென்னை சாகுபடியால் ஏமாற்றத்தில் உள்ள விவசாயிகளும், இந்த மாற்று முறையை பின்பற்றலாம், என்றார். இவருடன் பேச: 99655 40570. தாமோதரன், கன்னிவாடி.

## <u>*சின்ன சின்ன செய்திகள்*</u>



நிலக்கடலைப் பயிர் சாகுபடிக்கு நுண்தெளிப்பு நீர் மற்றும் உரப்பாசனம் : இறவை நிலக்கடலை விதையினை 30ஙீ10 செ.மீ. இடைவெளியில் மேட்டுப்பாத்திகளில் விதைக்க வேண்டும். நுண் தெளிப்பான் பாசனமுறை அமைப்பதற்கு பாதாள குழாய் மற்றும் துணைக்குழாய்கள் அமைக்க வேண்டும். ஒவ்வொரு பக்கவாட்டு குழாயிலும் இரண்டு மீட்டர் இடைவெளியில் நுண்குழாய் மூலம் நுண் தெளிப்பான்களை இணைக்க வேண்டும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை பாசன இடைவெளி காலத்தில் உரப்பரிந்துரையில் எக்டருக்கு 34 கிலோ என்ற அளவில் யூரியா மற்றும் பொட்டாஷ் உரங்களை நான்கு சம பாகங்களாகப் பிரித்து விதைத்த 15,30,45,60 நாட்களில் நுண்தெளிப்பான் மூலம் அளிக்க வேண்டும். இவ் வகை நுண்தெளிப்பான் உரப்பாசனம் கடைப்பிடிப்பதால் நிலக்கடலை மகசூல் எக்டருக்கு 400 கிலோ வரை அதிகரிக்கிறது. பயிரின் நீர்த்தேவை 50-100 மி.மி வரை குறைகிறது. டி.என்.ஏ.யு. பருத்தி பிளஸ் : பருத்திக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர். பயன்படுத்தும் முறை : ஏக்கருக்கு 2.5 கிலோ, தெளிப்பு திரவம் 200 லிட்டர், தெளிக்கும் பருவம் - பூக்கும் மற்றும் காய்ப்பிடிக்கும் பருவம், தேவையான அளவு ஒட்டு திரவம் சேர்க்கலாம். பயன்கள் : பூவும், சப்பைகளும் உதிர்வது குறையும். காய்கள் முழுமையாக வெடித்து, சீரான அறுவடைக்கு வழிவகுக்கிறது. விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கும். வறட்சியை தாங்கும் தன்மை அதிகரிக்கும். செலவு : ரூ.300/- ஏக்கருக்கு (தகவல் : மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை) நீடித்த நவீன கரும்பு சாகுபடிக்கு நிலத்தடி சொட்டுநீர் உரப்பாசனம் : ஒரு விதைப்பரு சீவல்முறையில் நாற்றுக்கள் தயாரித்தல் மூலம் விதைக் கரனைகளின் தேவையை குறைக்கவும், அதிக முளைப்புத்திறன், சுலபமாக இடம் விட்டு இடம் எடுத்து செல்லுதல், பயிர்களில் ஆரோக்கியம் ஆகியவற்றை வைத்து பார்க்கும் போது பரு சீவல்களைக் கொண்டு நாற்றுக்கள் உருவாக்கும் முறையே சிறந்ததாகக் கருதப்படுகிறது. வீரிய வளர்ச்சியுடைய இளம் நாற்றுக்களை (30-35 நாட்கள் வயதான) எடுத்து நடவு செய்தல், 6 அடி இடைவெளியில் பக்க குழாய்கள் அமைத்து இருபாருக்கும் 2 அடி இடைவெளியில்

நாற்றுக்களை நடவு செய்தல், மண்ணின் நீர்ப்பிடிப்புத்தன்மையை பொறுத்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் இடைவெளியில் சொட்டுநீர் பாசனம் செய்திடல் வேண்டும். சிபாரிசு செய்யப்படும் மணிச்சத்து உரத்தினை அடியுரமாக இடவேண்டும். தழை மற்றும் சாம்பல் சத்து உரங்களை சரியாகப் பிரித்து நடவு செய்த 15 முதல் 210 நாட்கள் வரை வாரம் ஒருமுறை யூரியா மற்றும் வெள்ளை பொட்டாஷ் வடிவில் சொட்டுநீர் வழி அளித்திட வேண்டும். இயற்கை உரம் அளித்தல் : நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையானது இயற்கை முறையில் உரம் அளித்தலை ஆதரிக்கிறது. இயற்கை உரங்களான தொழுஉரம், லேகிய உரம் மக்கிய பிரஸ்மட் ஆகியவற்றினை ஏக்கருக்கு 8-10 டன் அளவிற்கு அளிப்பது நல்லது. தழைச்சத்து ஒரு ஏக்கருக்கு 112 கிலோ கிடைக்கும். அளவிற்கு சரிபார்த்து மேற்கண்ட உரங்களை இடுவது சிறப்பு. இயற்கை உரங்களோடு டிரைகோடெர்மா அல்லது சூடோமோனாஸ் நுண்ணுயிரிகளை ஏக்கருக்கு 1 கிலோ அளவில் கலந்து அளிப்பது இன்னும் சிறந்தது. வேலையாட்களைக் கொண்டே கருவிகள் மூலமாகவோ நடவுக்குப்பின் 30,60 மற்றும் 90வது நாட்களில் களை எடுத்தல் மிகவும் அவசியம். மூடாக்கு போடுவதன் மூலம் மண்ணிலுள்ள களைகள் கட்டுப்படுவதுடன் மண்ணுக்கு தேவையான ஈரப்பதம் கிடைக்கிறது. கரும்பு சோகைகளை ஏக்கருக்கு 1.5 டன் அளவில் நடவுக்கு 3 நாட்களுக்குப் பின் பரப்பி விடுதல் நல்லது. அதேபோல் சோகை உரித்தால் அவைகளை பார் இடைவெளிகளில் பரப்பி வருவதும் சிறந்தது. முதல் முறையாக 45ம் நாளில் உரமிட்ட பின்பு மண் அணைத்து புதிதாக முளைக்கும் வேர்களுக்கு அணைப்பு கொடுக்க வேண்டும். கரும்புபயிர் ஒரு சாதாரண பயிரிலிருந்து ஒரு சமயத்தில் 30-35 சோகைகள் விடுகிறது. ஆனால் ஒளிச்சேர்க்கைக்கு மேற்புறமுள்ள 8-10 இலைகளை தேவைப்படும். எனவே கீழ்ப்புற முள் காய்ந்த மற்றும் சில காயாத இலைகளர் 5 மற்றும் 7வது மாதத்தில் உரித்து பார் இடைவெளியில் பரப்புவது சிறந்தது. (தகவல் : உழவியல் துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## கோடைப்பயிர்களுக்கு இலைவழி உரம்



கரும்பு : தழைச்சத்து உர அளவைக் குறைக்க யூரியாவை நீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் கரும்புப் பயிர் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். 25 கிலோ யூரியாவை 275 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் இலைகளில் இருமுறை அதாவது நட்ட 90 மற்றும் 100வது நாட்களில் தெளித்தால் நிலத்தில் கரும்புக்குத் தேவையான மேலுரமாக இடப்படும் யூரியாவில் 30 கிலோ சேமிக்கலாம். மேலும் யூரியாவைத் தெளிக்கும் போது மண் ஈரமாக இருப்பது நல்லது. கரும்பில் சோகை நோய் இரும்புச்சத்து பற்றாக்குறையினால் ஏற்படுகிறது. இலைகள் வெளுத்து நரம்புகளுக்கு இடையே பசுமை சோகை அடியிலிருந்து நுனிப்பகுதி வரை நீண்ட கோடுகளாக தென்படும். இவைகள் தான் இரும்புச் சத்துப் பற்றாக்குறையின் அறிகுறிகள். இது போன்ற அறிகுறிகள் பயிரில் தோன்றும் போது 2 சத அன்னபேதி உப்பை 1 கிலோ யூரியாவுடன் 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து பயிர் வளர்ச்சிக்கேற்ற அளவு நீர்க்கரைசலைத் தயாரித்து உபயோகிக்கவும். மேலும் சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள நிலங்களில் இரும்புச்சத்து உரத்தை இலைவழி மூலமாக தெளிப்பதே சாலச்சிறந்தது.

பருத்தி : பருத்தி செடி முளைத்து சுமார் 30 நாட்களான இளம் பருவத்திலும், காய் முதிர்ந்த நிலையிலும் செம்பட்டை எனப்படும் சிவப்பு இலைகள் தோன்றக்கூடும். இது மக்னீசியம் பற்றாக்குறையினால் ஏற்படுகிறது. வயலில் தண்ணீர் தேங்குவதாலும், மண்ணில் சாம்பல் சத்து அளவு அதிகரிக்கும் போதும்

இக்குறைபாடு ஏற்படுகிறது. மேலும் இலைகளில் நரம்புகள் பசுமை நிறத்துடனும், நரம்புகளுக்கு இடையிலுள்ள பகுதிகள் செந்நிறமாகவும் காணப்படும். முற்றிய நிலையில் இலைக்காம்பு தண்டு சிவப்பாக காணப்படும். இதனால் பருத்தியின் வளர்ச்சி குன்றி விளைச்சலும் குறைகிறது. இதனை நீக்க 500 கிராம் மக்னீசியம் சல்பேட்டையும் 100 லிட்டர் நீரில் கரைத்து இலைகளின் மீது நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். நிலக்கடலை : நிலக்கடலையில் முக்கியமாக விழுது இறங்கிய பின்பும் காய் பிடிக்காமல் போகும். இது பெரும்பாலும் போரான் என்னும் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையினால் ஏற்படும் விளைவாகும். இதை நிவர்த்தி செய்ய 0.2 சத போராக்ஸ், ஒரு சத பொட்டாஷ் மற்றும் 0.5 சத யூரியா நீர்க்கரைசலை விதைத்த 30 மற்றும் 40 நாட்களில் இரண்டுமுறை தெளிக்க வேண்டும். (400 கிராம் போராக்ஸ், 2 கிலோ பொட்டாஷ் மற்றும் 1 கிலோ யூரியாவை 200 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும்). பயறுவகைப் பயிர்கள் : தழை, மணி மற்றும் சாம்பல் சத்தை அளிக்கக்கூடிய வகையில் 2 சத டிஏபி மற்றும் 1சத பொட்டாஷ் உரக்கரைசலை பூக்கும் தருணத்திலும் பின் 15 நாட்கள் கழித்தும் இருமுறை மாலை வேளையில் தெளிப்பதால் பயிர்களும் வறட்சியை தாங்கி நன்கு வளர்ந்து விளைச்சல் அதிகரிக்கிறது. ஒரே ஒருமுறை தான் இலை வழியாக தெளிக்க முடியுமென்றால் அதே பூக்கும் தருணத்தில் தெளிப்பது மிகச் சிறந்ததாகும். கொ.பாலகிருஷ்ணன், விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் துறைத் தலைவர், விவசாயக் கல்லூரி, மதுரை.

## <u>மக்காச்சோளம் வரத்து குறைவு</u>

சின்னசேலம்: சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிக்கு மக்காச் சோளம் 45 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. மக்காச்சோளம் 100 கி., கொண்ட ஒரு மூட்டை அதிக விலையாக 1,359 ரூபாயும், குறைந்த விலையாக 1,329 ரூபாக்கும் விற்றது. சென்றவார நிலவரப்படி மக்காச்சோளம் 60 மூட்டைகள் 72 ஆயிரம்

ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. கம்பு பயிர் ஒரு மூட்டை 1,349 ரூபாய்க்கு நேற்று விற்பனையானது.

## நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்: ரூ.32 லட்சத்துக்கு விற்பனை

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 32 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 586 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 6,830க்கும், குறைந்த பட்சம், 5,739 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,280க்கும், குறைந்த பட்சம், 4,939 ரூபாய்க்கும் ஏலம்போனது. பனங்காலி ரகம், அதிக பட்சம், 13,899, குறைந்த பட்சம், 7,169 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 32 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## வெண்பன்றி வளர்ப்பு பயிற்சி வகுப்பு

நாமக்கல்: வெண்பன்றி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு, நாமக்கல் கால்நடை மருத்துவமனையின் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல்-மோகனூர் சாலையில் அமைந்துள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், வேளாண் அறிவியல் நிலையத்தில், வெண்பன்றி வளர்ப்பு மற்றும் பராமரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு, வரும், 18ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது. அதில், வெண்பன்றி வளர்ப்பு நன்மை, பன்றி இனம், வளர்ப்பு அமைவிடம், பண்ணை வீடு, இனப்பெருக்கம், சினைப்பன்றி பராமரிப்பு, பன்றி

குட்டி பராமரிப்பு, தீவன மேலாண்மை, நோய் மற்றும் தடுப்பு பிரச்னைகள் கற்றுத்தரப்படும். மேலும், விவரங்களுக்கு 04286-266 345 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## <u>சாத்துக்குடியின் வரத்து அதிகரிப்பால் விலை குறைவு</u>

தர்மபுரி: ஆந்திர மாநில சாத்துக்குடியின் வரத்து, தர்மபுரியில் அதிகமாக இருப்பதால், அதன்விலை குறைந்துள்ளது. விலை குறைவால், சாத்துக்குடியை வாங்க மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்தியாவில், ஆந்திர மாநிலத்தில் சாத்துக்குடியின் விளைச்சல் அதிகமாக உள்ளது. இதனால், தமிழகம் முழுவதும் ஆந்திர மாநில சாத்துக்குடியின் வரத்து, ஏப்ரல் முதல் ஜூன் மாதங்களை தவிர, மற்ற மாதங்களில் அதிகமாக இருக்கும். ஆந்திர மாநிலத்தில், சில தினத்துக்கு முன் பெய்த மழையால் சாத்துக்குடியின் விளைச்சல் அதிகமாக உள்ளது. இதன்காரணமாக, தர்மபுரி மாவட்டத்தில், ஆந்திர மாநில சாத்துக்குடியின் விளைச்சல் அதிகமாக உள்ளது. இதுகுறித்து, சாத்துக்குடி விற்பனையாளர் பாப்பிரெட்டிப்பட்டியை சேர்ந்த வேலவன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், ஆந்திர சாத்துக்குடியின் விளைச்சல் அமோகமாக உள்ளது. ஆண்டுதோறும், ஏப்ரல் முதல் ஜூன் வரை உள்ள மூன்று மாதங்களில் மட்டும், சாத்துக்குடியின் விளைச்சல் குறைவாக இருக்கும். அந்த மூன்று மாதங்களில், கிலோ, 30 ரூபாய் முதல், 40 ரூபாய் வரை சாத்துக்குடி விற்பனையாகும். மற்ற ஒன்பது மாதங்களில் சாத்துக்குடியின் வரத்து அதிகமாக இருப்பதால், அவற்றின் விலை, கிலோ, 17 ரூபாய் வரை மட்டுமே விற்பனையாகிறது. 30 கிலோ எடை உள்ள ஒரு மூட்டை சாத்துக்குடி, 500 ரூபாய் வரை விற்பனையாகிறது. சீஸன் இல்லாத மூன்று மாதத்தில், 1,500 ரூபாய் வரை, மூட்டை விற்பனையானது. விலை குறைவாக இருப்பதால், பொதுமக்கள் ஆர்வத்துடன், சாத்துக்குடியை வாங்கி செல்கின்றனர், என்றார்.

## எண்ணெய் வித்து சாகுபடி திட்டம் நடப்பாண்டு ரூ.38 லட்சம் ஒதுக்கீடு

ஈரோடு: நடப்பாண்டில் மாவட்டத்தில் மத்திய அரசின் தேசிய எண்ணெய் வித்துக்கள் மற்றும் எண்ணெய் பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ், 38.30 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது: ஆதார விதை உற்பத்திக்கு குவி ண்டால், 1,000 ரூபாய்க்கு, அதாவது, கிலோ, பத்து ரூபாய்க்கு, சான் று விதை உற்பத்திக்கு, குவிண்டா ல், 1,000 ரூபாய்க்கும் வழங்கப்படுகிறது. 50 சதவீத சான்று விதை வி னியோகத்துக்கு குவிண்டால், 1,200 ரூபாய்க்கு, அதாவது கிலோ, 12 ரூபாய் மானிய தொகையாக வழங்கப்படுகிறது. நிலக்கடலை செயல்விளக்க பணிக்கு, ஹெக்டருக்கு, 7,500 ரூபாய் வழங்கப்படுகிறது. விவசாயிகள் பயிற்சி பெற, 24 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. உயிர் உரங்கள் வினியோகத்தில், 50 சதவிகிதம் ஹெக்டருக்கு, 300 ரூபாய், உயிரியியல் பூச்சிகொல்லி வினியோகத்துக்கு, ஹெக்டருக்கு, 500 ரூபாய், களை கொல்லி வினியோகத்துக்கு ஹெக்டருக்கு, 500 ரூபாயும் வழங்கப்படுகிறது. நூண்ணுட்ட உரம் வினியோகத்துக்கு, 50 சதவிகிதம் ஹெக்டருக்கு, 500 ரூபாய், என்.பி.வி., வைரஸ் ஹெக்டருக்கு, 500 ரூபாய், ஒரு கை தெளிப்பான் வினியோகத்துக்கு, 800 ரூபாய், ஒரு விசை தெளிப்பான் வினியோகத்துக்கு, 3,000 ரூபாய், புதிய தொழில் நுட்ப விவசாய உபகரணங்கள் வழங்குவதற்கு, பத்தாயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. ஒரு ரோட்டவேட்டருக்கு, 63 ஆயிரம், ஒரு ஸ்பிரிங்ளர் வினியோகத்துக்கு, 8,820 ரூபாய் மற்றும் பைப்லைனுக்கு, 15 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. மானிய சலுகையை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும், என, அவர் கேட்டுக்கொண்டார்.

## ரூ.45.83 லட்சம் மதிப்பில் விளைபொருட்கள் ஏலம்

அந்தியூர்: அந்தியூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப்பாளையம், கொளத்தூர், சென்னம் பட்டி, பர்கூர் உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்தும், கர்நாடக மாநிலத்தில் இருந்தும், விளை பொருட்கள் ஏலத்துக்காக கொண்டு

வரப்பட்டது. வெள்ளை ரக எள், குறைந்த பட்ச விலையாக, குவிண்டால், 4,600 முதல், அதிகபட்ச விலையாக, 5,250 ரூபாய் வரை ஏலம் கேட்கப்பட்டு, 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. 30 ஆயிரம் தேங்காய், ஐந்து முதல், 16 ரூபாய் வரையிலான விலையில், மூன்று லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை தேங்காய், 150 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 98.9 முதல், 106.59 ரூபாய் வரை, ஆறு லட்சம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், பத்து மூட்டைகள் குறைந்த பட்ச விலையாக, 13.62 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 14.5 ரூபாய் என, 13 ஆயிரம் ரூபாய்க்கும் விலை போனது. பி.டி., ரக பருத்தி, 1, 500 மூட்டைகள், விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு, விற்பனையானது. மொத்த விளை பொருட்களும் சேர்த்து, 45.83 லட்சத்துக்கு ஏலம் போனது, என விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## <u>உச்சத்தை எட்டிய குறுமிளகு விலை: விவசாயிகள் மகிழ்ச்சி</u>

கூடலூர் : கூடலூர் சுற்றுப்புற பகுதிகளில் விளையும் குறுமிளகு விலை கிலோ 700 ரூபாயாக உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதிகளில் அதிகளவில் குறுமிளகு விளைவிக்கப் பட்டு வருகிறது.கடந்த ஆண்டு கிலோ 420 ரூபாயாக இருந்த குறுமிளகின் விலை, நடப்பாண்டில் 700 ரூபாயாக அதிகரித்துள்ளது.தற்போது, நல்ல விலை கிடைத்து வரும் நிலையில், கூடலூரில் நடப்பாண்டில் குறுமிளகு விளைச்சலும் அதிகரித்திருப்பது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.கூடலூர் பகுதியை சேர்ந்த குறுமிளகு வியாபாரி பாட்டசேரிபாபு கூறுகையில்,“கடந்த ஆண்டு குறுமிளகு உற்பத்தி குறைவு காரணமாக, இந்த ஆண்டு விலை உச்சத்தை எட்டியுள்ளது. இந்த ஆண்டு மே மாதம் பெய்த மழையின் காரணமாக கூடலூரில் மட்டுமின்றி, ஏற்காடு, கேரள மாநிலத்தின் இடுக்கி, வயநாடு, கர்நாடக மாநிலத்தின் கொடுகு பகுதிகளிலும் குறுமிளகுக்கு அமோக விளைச்சல் கிடைத்துள்ளது. அதிகரித்துள்ள விளைச்சல் காரணமாக, அடுத்த ஆண்டு இதன் விலை குறைய வாய்ப்புள்ளது,” என்றார்.

## <u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி</u>

லாலாப்பேட்டை: லாலாபேட்டை அடுத்துள்ள வயலூர் பஞ்சாயத்தில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. முகாமில், வயலூர் பஞ்.,க்கு உட்பட்ட சரவணபுரம், கோடங்கிப்பட்டி, குழந்தைப்பட்டி, பாம்பன்பட்டி, நடுப்பட்டி உள்ளிட்ட, 14 ஊர்களில் உள்ள கால்நடைகளுக்கு மருத்துவ அலுவலர் அருண் தலைமையிலான குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

## <u>துவரை சாகுபடியை அதிகரிக்க முடிவு; கிராமங்களில் சிறப்பு முகாம் துவக்கம்</u>

வடமதுரை : புரட்டாசியில் சாகுபடி செய்யப்படும் துவரையில் நவீன தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டுமென்பதற்காக கிராமங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், தற்போதைய மழையை பயன்படுத்தி விளைபொருட்களை உற்பத்தி செய்வதில் வேளாண்மை துறை தனி கவனம் செலுத்தி வருகிறது. புரட்டாசியில் துவரை சாகுபடி அதிக அளவில் நடைபெறும். இதற்காக வீரியரகமான கோர்.ஆர்.ஜி.-7 என்ற ரகத்தை வேளாண்மை பல்கலை அறிமுகப்படுத்தியுள்ளது. அதிகபட்சமாக 120 லிருந்து 135 நாட்களில் அறுவடையாகும். தனியாகவும், ஊடு மற்றும் வரப்பு பயிராகவும் துவரையை சாகுபடி செய்யலாம். போதுமான இடைவெளியினால் விதைகளை குறைப்பது உட்பட புதிய தொழில் நுட்பங்கள் தொடர்பான சிறப்பு முகாம்கள் வேளாண்மை துறையினரால் கிராமங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. உரங்கள், களைக்கொல்லி, பூச்சிமருந்து உட்பட தேவையான அனைத்து இடுபொருட்களையும் முழு மானியத்தில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை உதவி இயக்குனர் ராணி கூறுகையில், ""விவசாயிகளுக்கான சந்தேகங்களை நிவர்த்தி செய்து விளைச்சலை அதிகரிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துவரை சாகுபடிக்கான செலவு தொகையை வட்டார விரிவாக்க அலுவலகங்களிலிருந்து விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம்," என்றார்.

## <u>மலைப் பகுதி விவசாயிகள் நடவு பணிகளில் தீவிரம்</u>

தாண்டிக்குடி: தாண்டிக்குடி மலைப்பகுதியில் நீடிக்கும் தொடர் மழையால் விவசாயிகள் நடவு பணியை துரிதப்படுத்தியுள்ளனர். கடந்த சில வாரங்களாக பெய்யும் மழையால் மலைப்பகுதியில் நீரோடைகள், கிணறு, ஊற்றுப்பகுதியில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. குறுவிவசாய பயிர்கள் நடவு செய்வதற்கு ஏற்ற சீதோஷ்ண நிலை நிலவுகிறது. இதை பயன்படுத்தும் வகையில் விவசாயிகள்

பட்டர் பீன்ஸ், முருங்கை, ரிங் பீன்ஸ், பட்டாணி, கேரட், சவ்சவ், முட்டைக் கோஸ், நூக்கல் பயிர்களை நடவு செய்துள்ளனர்.பணப்பயிர்களான காபி, மலை வாழை, ஏலம், மிளகு, ஆரஞ்சு ஆகியவற்றின் காய்கள் தற்போதைய மழையால் திரட்சியடைந்து மகசூல் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. விளைச்சல் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் நடவு பணியை துவக்கியிருப்பதால் காய்கறி பற்றாக்குறை தவிர்க்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

**<u>18 ம் கால்வாய் விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்குமா? பெரியாறு நீர் மட்டம் 132 அடியை கடந்தது</u>**

கம்பம் : முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் 131 அடியாகும் போது, 18 ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்பட வேண்டும் என்ற உத்தரவு அமல்படுத்தப்படாதது விவசாயிகள் கேள்வி எழுப்பி வருகின்றனர். தேனி மாவட்டத்தில் முல்லைப் பெரியாறு பாசனத்தில் 14 ஆயிரத்து 707 ஏக்கர் இருபோக நெல் சாகுபடி நடக்கிறது. முல்லைப் பெரியாறை நம்பி 17 வாய்க்கால்கள் உள் ளன. இவைகள் அனைத்தும் ரோட்டிற்கு கிழக்கு பக்கம் அமைக்கப்பட்டுள்ளன. எனவே ரோட்டிற்கு கிழக்கு பக்கம் பொன் விளையும் பூமியாகவும், ரோட்டிற்கு மேற்கு பக்கம் மானாவாரி காடுகளாகவும் இருந்து வருகிறது. எனவே ரோட்டிற்கு மேற்கு பக்கம் அதாவது கம்பம், புதுப்பட்டி, அனுமந்தன்பட்டி, உத்தமபாளையம், கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் உள்ளிட்ட பகுதிகள் பயனடையும் வகையில் 18 ம் கால்வாய் அமைக்கப்பட்டது. இந்த கால்வாய் வெட்டப்பட்டதால் இப்பகுதியில் உள்ள 40 கண்மாய்களில் தண்ணீர் தேக்கப்படுகிறது. நிலத்தடி நீர்மட்டம் உயருகிறது. கோட்டங்களில் கிணறுகளில் தண்ணீர் குறையாமல் இருக்கிறது.

திறக்கவில்லை: முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 131 அடியாக உயரும் போது, நாள் ஒன்றுக்கு 250 கனஅடி வீதம் 18ம் கால்வாயில் 9 நாட்களுக்கு திறந்து விட அரசு ஆணை உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக அணையின் நீர் மட்டம் உயராததால் 18 ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை. ஆனால் இந்த ஆண்டு நீர் மட்டம் தற்போது 132 அடியை தாண்டிவிட்டது. ஆனால் அணையில் இருந்து 18 ம் கால்வாயில் தண்ணீர் திறக்காமல் உள்ளனர்.

மறந்து போனார்களா: கம்பம் எம்.எல்.ஏ., ராமகிருஷ்ணன் கூறுகையில், " தி.மு.க., ஆட்சியில் இரண்டு முறை 18ம் கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. கடந்த

மூன்று ஆண்டுகளாக 18ம் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை. இந்த ஆண்டு தற்போது அணை நீர் மட்டம் 132 அடியான போதும், 18 ம் கால்வாயை அரசும், அதிகாரிகளும் மறந்து போனதாக தெரிகிறது. தண்ணீர் திறக்க அரசு ஆணை இருந்தும், அதிகாரிகள் மவுனம் காப்பது ஏன் என்பது விளங்கவில்லை. இதனால் கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் பகுதிகளில் விவசாயம் கேள்விக்குறியாகி வருகிறது. மேலும் 18 ம் கால்வாய் பராமரிப்பின்றி முள்செடிகள் முளைத்து அடைத்து கிடக்கிறது. எனவே கால்வாயை தூர்வாரி, அணையில் இருந்து தண்ணீர் திறக்க உடனே அரசு உத்தரவிட வேண்டும்,' என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வீராணம் ஏரி நிரம்புகிறது</u>**



காட்டுமன்னார்கோவில்: கடலூர் மாவட் டம் காட்டுமன்னார்கோவிலில் வீராணம் ஏரி உள்ளது. இந்த ஏரிக்கு வடவாறு வழியாக கீழணையில் இருந்து தண்ணீர் வருகிறது. ஏரியின் மொத்த கொள்ளளவு 47.50 அடி. இங்கு தேக்கப்படும் தண்ணீரால் சுமார் 46 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பயன்பெறுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக வீராணம் ஏரி சென்னை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளின்

கட்டுப்பாட்டில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கோடைக்காலம் முடிந்தவுடன் மேட்டூர் அணை திறக்கப்பட்டு கீழணை யில் தண்ணீர் தேக்கப்படுகிறது. இதன் மூலம் வடவாறு வழியாக வீராணம் ஏரிக்கு தண்ணீர் அனுப்பப்படுகிறது. இந்த ஆண்டு கடந்த மாதம் 21 ம் தேதி வீராணம் ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் படிப்படியாக சேமிக்கப்பட்டு தற்போது 45.10 அடி தேக்கப்பட்டுள்ளது. ஏரிக்கு வடவாறு வழியாக வினாடிக்கு 785 கனஅடி தண்ணீர் வருகிறது. சென்னைக்கு இதில் இருந்து வினாடிக்கு 71 கனஅடி வீதம் தண்ணீர் அனுப்பப்படுகிறது. இன்னும் சில தினங்களில் பாசனத்திற்காக நீர் திறக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் வீராணம் ஏரி பாசன பகுதி விவசாயிகள் தங்களுடைய விவசாய ஆயத்த பணிகளை தொடங்கி செயல்படுத்தி வருகின்றனர். விரைவில் தண்ணீர் பாசனத்திற்கு திறக்கப்பட உள்ளதால் ஏரிக்கு அதிக அளவு தண்ணீர் அனுப்பும் பணியில் பொதுப்பணி துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் விரைவில் ஏரியின் முழு கொள்ளளவான 47.50 அடி நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வாழை இலை விலை 'கிடுகிடு'வென உயர்வு

மானாமதுரை: மானாமதுரையில் வாழை இலை விலை கிடுகிடுவென உயர்ந்ததால் ஓட்டல் மற்றும் விசேஷ வைபவங்களுக்கு வாழை இலையை கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு பொதுமக்கள், வர்த்தகர்கள் தள்ளப்பட்டுள்ளனர். கோயில்களில் நடக்கும் அன்னதானம், வீடுகளில் நடக்கும் விழாக்கள் மற்றும் ஓட்டல்களில் விருந்திற்கு அத்தியாவசியமாக தேவைப்படுவது வாழை இலையாகும். கடந்த ஆடி மாதத்தின் போது சுபமுகூர்த்த தினங்கள் இல்லாததும், முக்கிய பண்டிகைகள் இல்லாமல் போனதாலும் வாழை இலையில் தேவை குறைந்து இருந்தது. ஆடிமாத துவக்கத்தில் 200 இலைகள் கொண்ட 1 கட்டு ரூ 400க்கு விற்கப்பட்டது. இதனால் 5 இலை கொண்ட 1 அடுக்கு இலையின் விலை குறைந்து ரூ.10க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஆவணி மாதம்

துவங்கி முகூர்த்த தினங்கள் துவங்கி உள்ளதால், வாழை இலை விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. மானாமதுரை பகுதிக்கு மலம்பட்டி, திருப்பாச்சேத்தி வாழைச்சந்தைகளில் இருந்தும் முத்தனேந்தல், இடைக்காட்டூர், கள்ளர்வலசை உள்ளிட்ட கிராமங்களில் இருந்தும் வாழை இலை வருவது வழக்கம். மானாமதுரை தினசரி சந்தைக்கு வரத்து குறைந்து போனதால் 200 இலை கொண்ட 1 கட்டு ரூ. 1200 என 3 மடங்கு விலை அதிகரித்துள்ளது. 5 இலை கொண்ட ஒரு அடுக்கு ரூ.30 எனவும் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் முக்கிய விசேஷங்கள், மற்றும் ஓட்டல்களில் பிளாஸ்டிக் இலைகளும், பேப்பர் இலைகளும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதனால் பொதுமக்களுக்கு சுகாதாரக்கேடு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. இதுகுறித்து வாழை இலை வியாபாரிகள் கூறுகையில், 'கடந்த ஆடி மாதத்தில் காற்று அதிகமாக வீசியதால் இலைகள் கிழிந்து பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு இலை தரக்கூடிய வாழைக்கன்றுகளை விற்பனைக்காக அறுத்து எடுத்துவிட்டனர். புதிதாக நடவு செய்யப்பட்ட கன்றுகளில் இலை துளிர்க்க ஒரு மாதகாலம் ஆகும். இதனால் வழக்கமாக ஒரு வாழைத்தோப்பில் எடுக்கப்படும் இலைகளின் எண்ணிக்கையும் பாதியாக குறைந்துபோனது. மேலும் கடும் வறட்சி காரணமாக வாழை இலை உற்பத்தியில் இலை வரவும் குறைந்ததே விலை ஏற்றத்திற்கு காரணம்' என்றனர்.

## <u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி முகாம்</u>

தண்டராம்பட்டு,: தண்டராம்பட்டு அடுத்த நாராயணக்குப்பம் கிராமத்தில் நேற்று கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுக்க தடுப்பு ஊசி போடும் முகாம் நடைபெற்றது. இம்முகாம் 3 நாட்கள் நடைபெறும். அயோத்தி நகர், நெருஞ்சபாடி, நாராயணக்குப்பம், அப்பநாயக்கன் பாளையம், அண்ணாநகர், எடைப்பாளையம், ஆகிய கிராமங்களில் 1000க்கும் மேற்பட்ட ஆடு,மாடு, கோழிகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போட்டு வருகிறார்கள். இம்முகாமில் கல்நடை மருத்துவர் லட்சுமி பிரியா, உதவியாளர் செல்வம்,

ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர் அனுராதாகுமார் மற்றும் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கோமாரி நோய்தடுப்பூசி முகாம்

கறம்பக்குடி: கறம்பக்குடி ஒன்றியத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் பல்வேறு பகுதிகளில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகிறது. அம்புக்கோவில் ஊராட்சியில் நடைபெற்ற கால்நடை கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் ஊராட்சித் தலைவர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். இதில் கால்நடை மருத்துவர் சுரேஷ் தலைமையிலான மருத்துவ குழுவினர் 300க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போட்டனர். கரு.கீழத்தெரு ஊராட்சி மற்றும் மைலன்கோன்பட்டி ஊராட்சிகளில் கால்நடை மருத்துவர் சுரேஷ் தலைமையிலான மருத்துவ குழுவினார் தொடர்ந்து கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர். முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சையும் அளித்து வருகின்றனர். இந்த கால்நடை கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் கால்நடை உதவி ஆய்வாளர்கள் காந்திமதி பிரபாவதி மற்றும் கரு.கீழத்தெரு ஊராட்சித் தலைவர் அழகர் மற்றும் மைலன்கோன்பட்டி ஊராட்சித் தலைவர் சித்ரா முருகேசன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொன்டனர். முகாமில் 500க்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக மருத்துவ குழுவினர் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை

அறந்தாங்கி: அறந்தாங்கி அட்மா வட்டார பண்ணை தகவல் ஆலோ சனை மையத்தில் வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் உழவன் நண்பர்களுக்கான கலந்தாய்வு மற்றும் ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் அறந்தாங்கி வேளாண் உதவி இயக்குனர் பொன்னையா தலைமை வகித்து பேசுகையில், சம்பா நெல் சாகுபடி பற்றிய புதிய தொழில் நுட்பங்களையும் மற்றும் மண் மாதிரி சேகரிப்பு, விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு அனைத்து அனைத்து விவசாயிகளும் பெற வேண்டும். சிறுதானிய பயிர்களை விவசாயிகள் பயிரிடவேண்டும் என்றார். அட்மா குழு தலைவர் ஆத்மநாதன் விவசாயிகளு க்கு ஊக்கத்தொகைகளை வழங்கினார்.

ஏற்பாடுகளை அட்மா வட்டார உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் கலையரசன், ராமச்சந்திரன் செய்திருந்தனர். வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜகுபர்அலி நன்றி கூறினார்.

**<u>தா.பழூரில் குளிர்ந்த காற்றுடன் மிதமான மழை</u>**

அரியலூர்: அரியலூர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக வெய்யில் வாட்டி வதைத்த நிலையில், தா.பழூர் பகுதியில் நேற்று மாலை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டு குளிர்ந்த காற்றுடன் மிதமான மழை பெய்தது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் தா.பழூர் டெல்டா பகுதிகளில் சம்பா சாகுபடி பணியை தீவிரப்படுத்தி வந்த நிலையில், தற்போது பெய்து வரும் மழையால் விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>பாபநாசத்தில் பருத்தி ஏலம்</u>**

பாபநாசம் : பாப நாசம் ஒழுங்குமுறை விற் பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடந்தது.ஏலத்தில் மாலாபுரம், வளத்தாமங்கலம், திருப்பாலத்துறை, மதகரம், கோபுராஜபுரம், கபிஸ்தலம், அன்னுக்குடி, தெற்கு நாயகன்பேட்டை, பெருமாங்குடி, உத்தமதானபுரம், வங்காரம் பேட்டை, களஞ்சேரி, காலபோகம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 80 விவசாயிகள், கும்பகோணம் பகுதியி லிருந்து 2 வணிகர்கள் பங்கேற்றனர்.ஏலம் கண்காணிப் பாளர் பொறுப்பு தாட்சா யினி, இளநிலை உதவியா ளர் செந்தில்நாதன் முன்னிலையில் ஏலம் நடந்தது. ஏலத்தில் அதிகபட்சம் குவிண்டால் ரூ.4,684, குறைந்தபட்சம் ரூ.4,009, சராசரி ரூ.4,282 க்கு ஏலம் போனது. 12 வாரம் நடந்த ஏலத்தில் 5,769 விவசாயிகள் பயன் பெற்றனர். ரூ.4 கோடியே 6 லட்சத்து 99,862க்கு ஏலம் போனது.பாரத் கல்லூரியில் ஓணம் பண்டிகை விழாதஞ்சை, : தஞ்சை பாரத் அறிவியல் மற்றும் நிர்வாகவியல் கல்லூரியில் பேஷன் டெக்னாலஜி துறை சார்பில் ஓணம் பண்டிகை நடந்தது. விழாவை கல்லூரி செயலர் புனிதா கணேசன், கல்லூரி முதல்வர் முனைவர் வீராசாமி, துறைத்தலைவர் சிசில் அல்போன்ஸ், துறை பேராசிரியர்கள் குத்துவிளக்கு ஏற்றி வாழ்த்தினர். பேஷன் டெக்னாலஜி மாணவர்கள், அத்தப்பூ

கோலமிட்டு, கேரள பாரம்பரிய உடையணிந்து, பாட்டுபாடி நடனம் ஆடினர். விழாவில் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்று ஓணம் வாழ்த்தை பகிர்ந்து கொண்டனர்.

**தஞ்சை மாவட்டத்தில் காய்ச்சல், பாய்ச்சல் தொழில்நுட்பம் விவசாயிடம் கொண்டு செல்லுங்கள்வேளாண் அலுவலர்களுக்கு உத்தரவு**

தஞ்சை : நெல்லுக்கு ஏற்ற நீர் மேலாண்மை உத்தியான காய்ச்சலும், பாய்ச்சலும் தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் கொண்டு செல்ல வேண்டுமென வேளாண் அதிகாரிகளுக்கு கலெக்டர் சுப்பையன் உத்தரவிட்டார்.தஞ்சை காட்டுத்தோட்டத்தில் உள்ள மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத்தை கலெக்டர் சுப்பையன் ஆய்வு செய்தார். அப்போது நிலையத்தின் பணிகள், அங்கு பயிலும் வேளாண் பட்டய படிப்பு படிக்கும் மாணவர்களிடம் கலந்துரையாடி கல்வி, நெல் சாகுபடி பயிற்சி குறித்து கேட்டறிந்தார். ஆராய்ச்சி நிலையத்துக்கு வரும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் இங்கு விற்கப்படும் விதைகள் குறித்தும் ஒரே இடத்தில் விவசாயிகள் காண்கிற வகையில் பயிரிடப்பட்டுள்ள பல்வேறு நெல் ரகங்கள் குறித்தும் கலெக்டர் சுப்பையன் கேட்டறிந்தார். இதைதொடர்ந்து ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறும் ஆராய்ச்சிகளான சேறில்லா நடவு உட்பட பலவகை முறை, பாதுகாப்பான காய்ச்சலும், பாய்ச்சலும் என்ற நீர் மேலாண்மை, சொட்டுநீரில் நெல் சாகுபடி, விதை நெல் பயிரில் கலப்பு நீக்கம் மற்றும் குறுவையில் நெல்லுக்கு பதிலாக மாற்றுப்பயிர்கள் குறித்த ஆராய்ச்சி திடல்களை பார்வையிட்டார். அப்போது நெல்லுக்கு ஏற்ற நீர் மேலாண்மை உத்தியான காய்ச்சலும், பாய்ச்சலும் என்ற தொழில்நுட்பத்தை விவசாயிகள் கண்டறியும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் பைப் உபகரணத்தை பற்றி விவசாயிகளிடம் கொண்டு செல்ல வேண்டும் வேளாண் அலுவலர்களுக்கு கலெக்டர் சுப்பையன் உத்தரவிட்டார். மேலும் தாமதமாக தண்ணீர் வரும் சூழலில் பயிரிடக்கூடிய மிக குறைந்த வயதுடைய நெல் ரகங்களையும், வளர்ச்சியை தாங்கி கூடுதல் விளைச்சல் கொடுக்கக்கூடிய ரகங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும். டெல்டா மாவட்டங்களில் ஆங்காங்கே குளம், குட்டைகளில் மண்டி கிடக்கும்

ஆகாய தாமரையை அரிய உரமாக மாற்றும் தொழில்நுட்பத்தை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்றார்.ஆய்வின்போது ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ரவி, வேளாண் கல்லூரி சிறப்பு அலுவலர் முனைவர்.சாமிஅய்யன், கலெக்டரின் உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம் உட்பட அதிகாரிகள் உடனிருந்தனர்.

**<u>குறுகியகால நெல் விதைகள் மானிய விலையில் விநியோகம்</u>**

அலங்காநல்லூர்: குறுகியகால நெல் விதைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுகிறது. அலங்காநல்லூர் முல்லைப் பெரியாறு கால்வாய் பாசன பகுதியில் நாற்றங்கால் அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. முதல்போக நெல் சாகுபடிக்காக கடந்த 5ம் தேதி வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் வாடிப்பட்டி அருகே உள்ள பேரணை முதல் கள்ளந்திரி வரையிலான 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பெறும். நெல் நாற்றங்கால் அமைக்கும் பணியில் இப்பகுதி விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்காக அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலகத்தில் மானிய விலையில் குறுகிய கால நெல் விதைகள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக உதவி வேளா ண்மை இயக்குனர் ராமலெட்சுமணன் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், `நடப்பு விவ சாய பருவத்திற்கு குறுகிய கால நெல் ரகங்களான ஏ.எஸ்.டி.16, என்.எல்.ஆர், ஏ.டி.டி.45 போன்ற விதை நெல் ரகங்கள் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 100 முதல் 110 நாள் வயதுடைய இதுபோன்ற நெல் ரகங்களை விவசாயிகள் தேர்வு செய்ய வேண்டும் என தெரிவித்தார். இதேபோல் கள்ளந்திரி, காஞ்சரம்பேட்டை, சத்திரப்பட்டி, அச்சம்பட்டி மற்றும் வாடிப்பட்டி பகுதிகளிலும் நெல் விவசாயத்திற்கான பணிகள் நடந்து வருகிறது.

**<u>இயற்கை வேளாண்மை தொழில்நுட்ப களப்பயிற்சி விவசாயிகள் பங்கேற்பு</u>**

ராமநாதபுரம், : இயற்கை வேளாண்மை, தொழில்நுட்ப களப்பயிற்சி ராமநாதபுரம் எட்டிவயல் கிராமத்தில் நடந்தது. ராமநாதபுரத்தில் தரணி விவசாய ஆராய்ச்சி மற்றும் கிராமப்புற மேம்பாட்டு நிறுவனம் சார்பில் 2 நாள் பயிற்சி எட்டிவயல் விவ

சாய ஆராய்ச்சி பண்ணையில் நடந்தது. கலெக்டர் நந்தகுமார் பயிற்சியை தொடங்கி வைத்தார். தரணி விவசாய ஆராய்ச்சி கிராமப்புற மேம்பாட்டு அறங்காவலர் தரணி முருகேசன் வரவேற்றார். ராமநாதபுரம், பரமக்குடி, கமுதி, மண்டபம், திருவா டானை, போகலூர், புதுக் கோட்டை, திருச்சி, மதுரை மற்றும் திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் களப்பயிற்சியில்பங்கேற்றனர். சிறுதானிய உற்பத்தி, மறுமதிப்பு கூட்டுதல், விளக்கத்தை பரமக்குடி ரமேஷ், திட்ட அமைப்பு இயக்குனர் மதுரை கண் ணன் ஆகியோர் விளக்கம் அளித்தனர். இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் செயல்விளக்க பயிற்சி, பஞ்சகவ்யம் தயாரித்தல், மீன்அமிலம், அமுதக்கரைசல், தேமோர் கரைசல், மூலி கைப் பூச்சி விரட்டி, மக்கு உரம் தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், மூடாக்கு, இருமடிப்பாத்தி அமைத்தல் உள்ளிட்ட செயல்விளக்கத்தை அட்மா தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் செயல் விளக்க பயிற்சி அளித்தார். ஒருங்கிணைந்த பண் ணையம் அனுபவ பகிர்வு குறித்து ராசா, பூச்சியியல் வல்லுநர் செல்வம், காளான் வளர்ப்பு அருள்தாமஸ், காலி இடங்களில் தோட் டம் அமைத்தல் குறித்து விவசாயி சிவா ஆகியோர் பங்கேற்று பேசினர்.

தினத்தந்தி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெற்பயிரில் புகையான் நோய் தாக்குதல்</u>



உத்தமபாளையம், கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு உள்ள நெற்பயிரில் புகையான் நோய் தாக்குதல் ஏற்பட்டு உள்ளது. இந்த நோய் தாக்குதல் குறித்து வேளாண் விஞ்ஞானிகள் குழுவினர் நேரில் வந்து ஆய்வு செய்து வருகின்றனர். நெற்பயிரில் புகையான் நோய் தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதி லோயர் கேம்ப்பில் தொடங்கி பழனி செட்டிபட்டி வரை உள்ளது. இதில் முல்லைப்பெரியாறு பாசனம் மூலம் 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த காலங்களில் பருவமழை பொய்த்துப் போனதால் இருபோக விவசாயம் முழுமை அடையவில்லை. இந்த ஆண்டு முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையின் தயவால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் முதல்போக நெல் சாகுபடி நடவு பணிகள் முடிந்து நெற்பயிர்கள் வளர்ந்து உள்ளன. பெரும்பாலான இடங்களில் பால் பிடிக்கும் பருவத்தில் பயிர்கள் உள்ளன. இந்த நிலையில் உத்தமபாளையம், சின்னமனூர், ராயப்பன்பட்டி, சுருளிப்பட்டி, கம்பம், கூடலூர் ஆகிய பகுதிகளில் உள்ள வயல்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிரில் புகையான் நோய் தாக்கி வருகிறது. இதுகுறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகளுக்கு விவசாயிகள் தகவல் தெரிவித்தனர். விஞ்ஞானிகள்ஆய்வு இதனை அடுத்து பெரிய குளம் தோட்டக்கலைத்துறை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய பூச்சியியல் துறை விஞ்ஞானி சுரேஷ், வேளாண்மை அறிவியல் மைய ஒருங்கிணைப் பாளர் மாரிமுத்து, தேனி உழவர் பயிற்சி மைய வேளாண்மை உதவி இயக் குனர் நாட்ராயன் உள்ளிட் டோர் கொண்ட குழுவினர் புகையான் நோய் தாக்குதல் ஏற்பட்ட பகுதிகளில் நேரில் சென்று நெற்பயிரை பார்வை யிட்டனர். நோய் தாக்கிய பயிர்கள் மாதிரியை ஆய்வுக் காக பறித்துச் சென்றனர்.

இந்த ஆய்வு குறித்து பூச்சியியல் துறை விஞ்ஞானி சுரேஷ் கூறுகையில், ‘கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் மாலை நேரங்களில் மேகமூட் டத்துடன் சாரல் மழைபெய்து வருகிறது. இதனால் நெல் பயிர்களில் புகையான் நோயை உண்டாக்கும் பூச்சி கள் அதிக அளவில் பயிர்களில் ஒட்டிக்கொள்கிறது. இந்த நோய் தாக்குதல் வயல்களில் மையப் பகுதிகளில் வட்ட வட்டமாக சூழ்ந்து பயிர்களை தாக்கி பயிர்கள் தீய்ந்தது போல் மஞ்சள் பழுப்பு நிறமாக மாறி காணப்படும். இதனால் வளர்ச்சி அடைந்த பயிர் கள்காய்ந்து வட்டவடிவ திட் டுகளாக நிலத்தில் சாய்ந்து காணப்படும். இந்த நோயை கட்டுப்படுத்த

நோய்தாக்குதல் நேரத்தில் யூரியா உரத்தை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். வயல்களில் உள்ள தண்ணீரை வடித்த பிறகு புப்ரோபெசின் மருந்தினை ஏக்கருக்கு 200 மில்லி அளவில் கலந்து பயிரின் அடிப்பகுதியில் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்' என்றார்.

**<u>கரூர் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி</u>**



கரூர் மாவட்டத்தில் சவ்வரிசி விலை உயர்வின் காரணமாக மரவள்ளிக்கிழங்கின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மரவள்ளிக்கிழங்கு கரூர் மாவட்டத்தில் வேட்ட மங்கலம் குந்தானிபாளையம், கவுண்டன்புதூர், ஓரப்புப் பாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கரில் விவ சாயிகள் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளையும் மரவள்ளிக்கிழங்குகளை புதன் சந்தை, புதுச்சத்திரம், செல்லப் பம்பட்டி, மின்னாம்பள்ளி, கீரனூர், நாமகிரிபேட்டை, தொ.ஜேடர்பாளையம் உள் ளிட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் சவ்வரிசி தயார் செய்யும் கிழங்கு மாவு மில்களுக்கு தரகர்கள் மூலம் டன் கணக்கில் வாங்கி அனுப்பி வைக்கின்றனர். விலை நிர்ணயம் மரவள்ளிக் கிழங்குகளை (டார்ச்) பாய்ண்ட் அடிப் படையில் வாங்குகின்றனர். கிழங்குகளில் எத்தனை பாய்ண்ட் டார்ச்சத்து இருக் கிறதோ அதற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதேபோல் சவ்வரிசி விலை உயரும் போதும், வீழ்ச்சி அடையும் போதும் சேக்கோ சர்வோ மூலம் விலை நிர்ணயம் செய்யப்படு கிறது. சவ்வரிசி விலை உயரும்போது மரவள்ளி கிழங்கின் விலை உயரும். சவ்வரிசி விலை வீழ்ச்சி அடையும்போது மரவள்ளி கிழங்கின்

விலை குறைத்து நிர்ணயம் செய்யப் படுகிறது. மரவள்ளிக் கிழங்கில் இருந்து பசை மாவு தயார் செய்யப்படுகிறது. அதேபோல் மரவள்ளிக் கிழங்கில் இருந்து பல்வேறு வகையான சிப்சுகள் தயார் செய்யப்படுகிறது. மேலும் பொதுமக்கள் மர வள்ளிக் கிழங்குகளை வாங்கி வேக வைத்தும் சாப்பிடுகின்றனர்.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

இந்நிலையில் கடந்த சில வாரங்களாக மரவள்ளிக் கிழங்கு ஒரு டன் ரூ.7 ஆயிரத்திற்கு விற்பனை யானது. இந்த வாரம் ஒரு டன் ரூ.10 ஆயிரத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது. சிப்ஸ் தயாரிப்பவர்கள் ஒரு டன் மரவள்ளிக் கிழங்கை ரூ.10 ஆயிரத்து 500-க்கு வாங்கிச் செல்கின்றனர். சவ்வரிசி விலை உயர்வின் காரணமாக மரவள்ளிக் கிழங்குகளின் விலை அதிகரித்துள்ளது. இத னால் மரவள்ளி கிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.